செ.வெ.எண்-11 நாள்-11.06.2018

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர், மாவட்ட முன்னாள் படைவீரர் நல, உதவி இயக்குநர் அலுவலகத்தில் **அலுவலக உதவியாளர் பணியிடம் மற்றும் இரவு காவலர்** பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

**அலுவலக உதவியாளர் பணியிடம்** இன சுழற்சி அடிப்படையில் நிரப்பப்படவுள்ளதால். பிற்படுத்தப்பட்டவர் Backward Class (முஸ்லீம் அல்லாதவர்-Other than BC Muslims) இனத்தைச் சேர்ந்த 18 முதல் 32 வயதுக்குட்பட்ட முன்னுரிமையுடைய ஆண்கள், பெண்கள், விதவையர்கள் மற்றும் மாற்று திறனாளிகள் 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் தங்களின் விண்ணப்பத்தை கல்விச்சான்று. சாதிச்சான்று, முன்னுரிமைக்கான சான்று மற்றும் இருப்பிடச் சான்றுகளுடனும் மற்றும் **இரவு காவலர் பணியிடம்** இன சுழற்சி அடிப்படையில் நிரப்பப்படவுள்ளதால். பொது பிரிவு (General category) இனத்தைச் சேர்ந்த 18 முதல் 35வயதுக்குட்பட்ட முன்னுரிமையற்ற ஆண்கள், பெண்கள், விதவையர்கள் மற்றும் மாற்று திறனாளிகள் 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் தங்களின் விண்ணப்பத்தை கல்விச்சான்று. சாதிச்சான்று மற்றும் இருப்பிடச் சான்றுகளுடன் உதவி இயக்குநர், முன்னாள் படைவீரர் நல அலுவலகம், 72-ஏ, புதிய மார்க்கெட் தெரு, அரியலூர் 621 704 என்ற முகவரிக்கு **30.06.2018 மாலை 5.45-க்குள்** வந்து சேருமாறு அனுப்ப வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**